2011 பிப்ரவரி 8]

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்றுப் பத்தாவது முதல் நூற்றுப் பதினைந்தாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுத் தலைவர்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் பதினொன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம், இரண்டாம் நாள். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, ஒதுக்கப்பட்ட நேரம் 25 நிமிடங்கள்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலத்து வரலாறே! வளர் தமிழகம் போற்றும் பொக்கிஷமே! தென்னகத்துக் குலவிளக்கே! எங்களை வாழவைக்கும் அன்னையே! இயக்கத்தை மக்கள் ஆதரவு என்ற மகத்தான சக்தியுடன் வெற்றிப் பாதையில் இட்டுச் செல்பவரும் வருங்கால தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா